

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் நேற்று 24ஆம் தேதி மாவட்ட ஊராட்சி மூலம் ஊராட்சிகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு மின்கல வாகனங்கள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைத்தனர்.உடன் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. சுகுமார்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,ரூபி மனோகரன் எம்.எல்.ஏ முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் ஜெகதீஸ், மாவட்ட ஊராட்சி செயலர் விசாலி,துணைத் தலைவர் செல்வலட்சுமி அமிதாப்,பாளை ஒன்றிய குழு தலைவர் கே.எஸ். தங்கபாண்டியன் உள்பட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் புதிய விரிவான சிற்றுந்து திட்டம் 2024 தொடர்பாக மதுரை, கோயம்புத்தூர், விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட மண்டல அலுவலர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், முதன்மை செயலாளர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் சுன்சோங்கம் ஜடக்சிரு, மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### சி.என்.அண்ணாதுரை எம்.பி. தலைமை! திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க.

# இளைஞர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, பிப். 25 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

23.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரை தலைமை வகிக்கிறார். மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலிப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை யாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ. வே.கம்பன், மாநில இளைஞரணி துணை செயலாளர் க.பிரபு கஜேந்திரன்,

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன்,

மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜய லட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், செய்திதொடர்பு இணைச் செயலாளர் சிவ ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக நகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறுகிறார்.

### ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பைக் கண்டித்து

# நெல்லையில் மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் அறிக்கை!

நெல்லை, பிப். 25 -

நெல்லையில் ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பை கண்டித்து இன்று (25 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை) மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.



திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு ஆலோசனைப்படி இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் இன்று (25.02.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆகவே நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தி.மு.க. மாணவர் அணியினர் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அன்னைத் தமிழைக் காக்க – ஆதிக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து – இன்று

# மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தி.மு.க. மாணவர் அணி சார்பில் பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**சென்னை, பிப்.25–**

**அன்னைத் தமிழைக் காக்க, ஆதிக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (Federation of Students Organisation – Tamil Nadu) மற்றும் தி.மு.க. மாணவர் அணி சார்பில், பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பைச் சிதைக்கும் உள்நோக்கத்துடனும், ஆதக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, கடந்த 21.02.2025 அன்று நடைபெற்ற மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலும், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும் முதற்கட்டப் போராட்டமாக, மொழிப் போருக்கு வித்திடும் வகையில் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, இன்று (25.02.2025) தமிழ்நாடு மற்றும் புதுவை உள்ளிட்ட ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் உள்ள முக்கிய நகரங்களில் “பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற உள்ளது.

தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கின்ற வகையில், நமது கண்டனத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு உணர்த்தும் வகையிலும், ஒன்றிய அரசைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் அலுவலகங்களின் முன்பு பேரணியுடன் கூடிய ஆர்ப்பாட்டத்தை, மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்புதமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகளுடன் கலந்துபேசி ஒருங்கிணைந்து, மாணவர் அணியின் நிர்வாகிகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்களுடன் பெருந்திரளாக பேரணி சென்று ஆர்ப்பாட்டத்தை மாபெரும் எழுச்சியாக நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கழக மாவட்டத்தில் உள்ள கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகளோ, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பில் உள்ள மாணவர் அமைப்புகளின் மாநில நிர்வாகிகளையோ சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து, கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றுகிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்ப்பாட்டத்தின் போது, சர்வாதிகாரப் போக்கோடு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு நிதி தராமல் கல்வியைச் சிதைக்கின்ற படுபாதகச் செயலில் ஈடுபட்டு வருவதையும், தொன்மை வாய்ந்த நம் தமிழ்மொழியை அழிக்க வேண்டுமென்ற பா.ஜ.க.வின் தீய நோக்கத்தை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையிலும், யு.ஜி.சி. வரைவுக் கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும் தேசியக் கல்விக் கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தை மிக எழுச்சியுடன் நடத்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எஸ்.மலையனூர் அணைக்கட்டு புனரமைப்புப் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (23.02.2025) அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்கள், இந்த நிகழ்வில் ஒன்றிய குழு பெருந்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் ப.ராஜவேல், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி, உதவி செயற்பொறியாளர் மோகன் உள்ளிட்ட தொடர்புடைய துறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில்

# இந்தி எழுத்தை தார்பூசி அழித்து தி.மு.க.வினர் போராட்டம்!

## மும்மொழிக் கொள்கைக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

பொள்ளாச்சி, பிப். 24 -

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு தமிழகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் பொள்ளாச்சி ரெயில் நிலைய பலகையில் இருந்த இந்தி எழுத்தை தி.மு.க. வினர் தார்பூசி அழித்தனர்.

மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் மல்படுத்த ஒன்றிய அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டவட்டமாக கூறி விட்டார்.

இந்நிலையில் மும்மொழிக் கொள்கையை திணிப்பதில் மத்திய அரசு முழுமையாக ஈடுபட்டு வரு வதை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இதில் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

மேலும் தமிழ்நாட்டில் முழுவதும் வீடுகளுக்கு முன் இந்தி எதிர்ப்பு வாசகம் மற்றும் ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு எதிராக கோலமிட்டு பெண்கள் தங்கள் எதிர்ப்பை காட்டி வருகின்றனர். நாளுக்கு நாள் இந்த விவகாரம் விஸ்வ ரூபம் எடுத்து வருகிறது.

இந்நிலையில் கோவை மாவட்டம், பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பெயர் பலகையில் இந்தி எழுத்தை தி.மு.க.வினர் தார்பூசி அழித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், நகர் மன்ற உறுப்பினர் செந்தில் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணி மாறன் தென்றல், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்க துரை, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அவினாஷ் கார்த்திக், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பைக் பாபு, ஸ்ரீரங்கன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஒன்றிய அரசின் இந்தி திணிப்புக்கு எதிராகவும், மும்மொழிக் கொள்கைக்கு எதிராகவும் முழக்கமிட்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# திருப்புவனத்தில் கிராமிய நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, பிப். 25 -

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் திருப்புவனத்தில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்ப சாமி ,பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி ஆகியோர் முன்னிலையில் புதுகை பூபாலனின் கிராமிய நையாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியினை கூட்டுறவுத் துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான கே.ஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன், மாவட்டக் கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இதில் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன் கென்னடி, மானாமதுரை நகர்கழகச் செயலாளர் க. பொன்னுச்சாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் பேரூராட்சி மன்ற தலைவர் துணைத் தலைவர் ரஹ்மத்துல்லா கான் ,முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் மூர்த்தி, ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ராமலிங்கம், பிச்சைமணி ,ஈஸ்வரன், சுப்பையா, வெங்கடேசன், சுப்பிரமணியன், இளங்கோ, ரவி, ராமு , மகேந்திரன் , அன்னமுத்து இளங்கோவன், சக்தி முருகன் , மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சேகர், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் திருநாவுக்கரசு,மீனவரணி அண்ணாமலை , இளைஞரணி அறிவுக்கரசு, கண்ணன், ராஜு, மீனாட்சி சுந்தரம், பாலகிருஷ்ணன், வடிவேலு, தேளி கோபால், மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ராஜா, மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் ராமச்சந்திரன், ஒன்றிய மாணவ ரணி அமைப்பாளர் காளிதாஸ் , பாண்டியர் கிருஷ்ணன், பேரூராட்சி கவுன்சிலர்கள் பத்மாவதி, முத்துக் குமார், ராமலட்சுமி பாலகிருஷ்ணன், சித்ரா ஆறுமுகம், பிரகாஷ், கவிதா பானு, ஷேக் முகமது உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.எம். பொற்கோ நன்றி கூறினார்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணைநல்லூர் பேரூராட்சியில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி வீதி, வீதியாக இந்தித் திணிப்பை எதிர்த்து துண்டு பிரசுரங்களை வழங்கி ”தமிழ் மொழி வாழ்க” என முழக்கங்களை எழுப்பினார். மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர். சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தே. பொன்னுசாமி

**பிப்ரவரி 25 (1986)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**